ருக் வேதம் ஆஷ்வலாயன சூத்திரம்.- உபாகர்மா 17-08-2016 புதன் கிழமை

ஸ்ரீ குருப்யோ நமஹ

உபாகர்மாவுக்கு பொது இடங்களுக்கு சென்று பூணல் போட்டுகொள்ளும் போது அரிசி, கருப்பு எள்ளு. பருப்பு; நெய், தேங்காய், பழம், வெல்லம், வெற்றிலை பாக்கு. தக்ஷிணை. பஞ்ச பாத்திர உத்திரிணி, தாம்பாளம், கொண்டு செல்ல வேண்டும்.

ப்ரணம்ய சிரஸா தேவம் கெளரீ புத்ரம் வினாயகம். பக்தா வாஸம் ஸ்மரே நித்யம் ஆயூஹு காமார்த்த ஸித்தயே. ஆபாத மெளலி பர்யந்தம் குரூனாம் ஆக்ருதீம் ஸ்மரேத். தே ந விக்னாஹா ப்ரணச்யந்தி ஸித்யந்தி ச மனோரதாஹா.

இரு தடவை ஆசமனம் செய்யவும். ஆசமனம். அச்யுதாய நம: அனந்தாய நம: கோவிந்தாய நம:. உள்ளங் கையில் உத்திரிணி ஜலம் விட்டு ப்ரும்ஹ தீர்த்தத்தால் அருந்தவும்.

கேசவ ,நாராயண என்று கட்டை விரலால் வலது, இடது கன்னங்களையும்,.மாதவ கோவிந்த என்று பவித்ர விரலால் வலது, இடது கண்களையும்,
விஷ்ணோ ,மதுசூதனா என்று ஆள் காட்டி விரலால் வலது, இடது மூக்கையும், ,
த்ரிவிக்ரம ,வாமன என்று சுண்டு விரலால் வலது, இடது காதுகளையும்,
,
ஸ்ரீதர, ஹ்ரிஷீகேஸ என்று நடு விரலால் வலது, இடது தோள்களையும் பத்மநாபா என்று எல்லா விரல்கலால் மார்பிலும், தாமோதரா என்று எல்லா விரல்கலாலும் சிரஸிலும் தொட வேன்டும்

கையில் பவித்ரம் தரிக்கவும். இரு தர்பை புல் பவித்ரத்துடன் தரிக்கவும்.ஒரு பித்தளை தாம்பாளத்தில் வெற்றிலை பாக்கு பழம் தக்ஷிணை யுடன் வைத்துகொண்டு எழுந்து நின்று சாஸ்த்ரிகளை பார்த்து சொல்லவும்.

நமோ மஹத்ப்யோ நமோ அர்ப்பகேப்யோ நமோ யுவப்யோ நம ஆஸீநேப்யஹ .யஜாம தேவான் யதி ஸக்நவாம மாஜ்யாயஸஹ ஸம்சமாவ்ருக்ஷி தேவாஹா ஹரிஹிஓம்

Credits: www.tamilbrahmins.com

ஓம் நமஸ் ஸதஸே நமஸ்ஸதஸஹ பதயே நமஹ ஸகீணாம் ப்ரோகானாம் சக்ஷுஸே நமோ திவே நமஹ் ப்ருதிவ்யை ஸர்வேப்யோ ப்ராஹ்மனேப்யோ நமஹ  அசேஷே ஹே பரிஷத் பவத் பாத மூலே மயா சமர்பிதாம் இமாம் ஸௌவர்ணீம் தக்ஷிணாம் யத் கிஞ்சித் தக்ஷிணாமபி யதோக்த தக்ஷிணா மிவ தாம்பூலம் ச ஸ்வீக்ருத்ய.

அதீதானாம் வேதானாம் அயாதயா மத்வாய அத்யேஷ்ய மாணாநாம் சந்தஸாம் ச வீர்யத்வாய ஸ்ராவண்யாம் ஸ்ரவண நக்ஷத்ரே அத்யாய உபாகர்மம் கர்த்தும் யோகியதா ஸித்திம் அநுக்ரஹான.   ( யோகியதா ஸித்திரஸ்து))

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசி வர்ணம் சதுர்புஜம் ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்ன உபசாந்தயே.

ஓம் பூஹு.. ஓம் புவஹ ஓம் ஸ்வஹ ஓம் மஹஹ ஓகும் ஸத்யம், ஓம் தத்ஸ விதுர்வரே ணியம் பர்கோ தேவஸ்ய தீ மஹி தியோ யோநஹ ப்ரசோதயாத். ஓமாபோ ஜ்யோதிரஸோ அம்ருதம் ப்ரஹ்மா ஓம் பூர்புவஸ்ஸுவரோம்.

மமோ பாத்த ஸமஸ்த துரிதயக்ஷயத்வார ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் ஏதேஷாம் க்ருஹஸ்தானாம் ப்ருஹ்மசாரீனாம் மம ச அதீதானாம் வேதானாம்  அயாதயா மத்வாய அத்யேஷ்ய மானாநாம் சந்தஸாம் சவீர் யத்வாய ஸ்ராவண்யாம்  ஸ்ரவண நக்ஷத்ரே அத்யாய உபாகர்ம கரிஷ்யே.

தத் அங்கம் விக்னேஸ்வர பூஜாம்,புண்யாஹா வசனம். நாந்தி சிராத்தம் ஹிரண்ய ரூபேண கரிஷ்யே. அநந்தரம் சாவித்ரியாதி நவ ப்ரதான தேவதா ஸஹிதம் த்வாதச ரிஷி பூஜாம் ச கரிஷ்யே.

நாந்தி சிராத்தம் தலை ஆவணி அவிட்டம் உள்ள்வர்களுக்கு மட்டும் தான் உண்டு..

ஒன்பது ப்ரதான தேவதை.

சாவித்ர்யை நமஹ; ப்ரஹ்மணே நமஹ; ஸ்ரத்தாயை நமஹ; மேதாயை நமஹ; ப்ரஞ்ஞாயை நமஹ; தாரணாயை நமஹ; சதஸஸ்பதயே நமஹ; அநுமதயே நமஹ; சந்தோப்ய ரிஷிப்யோ நமஹ;

பன்னிரண்டு ரிஷி பூஜை

சதர்சினே நமஹ; மாத்யமாய நமஹ;. க்ருத் ஸமதே நமஹ; விஸ்வாமித்ராய நமஹ; வாமதேவாய நமஹ; ; அத்ரயே நமஹ; பரத்வாஜாய நமஹ; வசிஷ்டாய நமஹ; ப்ரகாதாய நமஹ; பாவமான்யாய நமஹ; க்ஷுத்ர ஸூக்தாய நமஹ; மஹா ஸூக்தாய நமஹ;

16 உபசார பூஜை செய்யவும்.தயிரும் ஸத்து மாவும் நைவேத்யம் செய்யவும்.

த்வாதச ரிஷி நவ ப்ரதான தேவதாம் ச ஆவாஹயாமி ஆசனம் சமர்பயாமி

அர்க்கியம் சமர்பயாமி; ஆசமனம் சமர்பயாமி;மதுபர்கம் சமர்பயாமி; ஸ்நானம் சமர்பயாமி; வஸ்த்ரம் சமர்பயாமி. ஆபரணம் சமர்பயாமி உபவீதம் சமர்பயாமி; கந்தம் ( சந்தனம் ) சமர்பயாமி; புஷ்பம் சமர்பயாமி; தூபம் சமர்பயாமி தீபம் சமர்பயாமி; நைவேத்யம் ஸமர்பயாமி; தாம்பூலம் சமர்பயாமி; கற்பூர நீராஞ்சனம் சமர்பயாமி.

ப்ருஹ்ம யக்ஞம்;

1.
2. பூணல் வலம். இரண்டு தடவை ஆசமனம் செய்யவும்.

   சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசி வர்ணம் சதுர் புஜம் ப்ரசன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்.ன உபசாந்தயே..

   ஓம் பூ:++++பூர்புவசுவரோம். மமோபாத்த +ப்ரீத்யர்த்தம் ப்ரம்ஹ யஞ்ஞேன கரிஷ்யே.

   ஓம். பூர்புவஸ்வ: தத்ஸ விதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோன: ப்ரசோத யாத்

   தத்ஸ விதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோன: ப்ரசோதயாத்

தத்ஸ விதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோன: ப்ரசோதயாத்

அக்னிமீளே ப்ரோஹிதம் யஞ்யஸ்ய தேவ ருத்விஜம் ஹோதாரம் ரத்ன தாதமம்..
அக்னி: பூர்வேபி: ரிஷிபி: ஈட்ய: நூதனைருத ஸ தேவாம் ஏஹ வக்ஷதி

அக்னிநா ரயிமச்னவத் போஷமேவ திவேதிவே யசஸம் வீரவத்தமம்.
அக்னேயம் யஜ்ஞமத்வரம் விச்வத: பரிபூரஸி ஸ இத்தேவேஷு கச்சதி

அக்னிர்ஹோதா கவிக்ரது: ஸத்ய: சித்ரச்ரவஸ்தம: தேவோதேவபி: ஆகமத்.
யதங்க தாசுஷெ த்வம் அக்னே பத்ரம் கரிஷ்யஸி தவேத்தத் ஸத்யமங்கிர:

உபத்வாக்னே திவேதிவே தோஷாவஸ்த: தியாவயம் நமோ பரந்த: ஏமஸி.
ராஜிந்தம் அத்வராணாம் கோபாம் ருத்ஸ்ய தீதிவிம் வர்தமானம் ஸ்வேதமே.
ஸந :பிதேவ ஸூநவேக்னே ஸூபாயனோ பவ ஸசஸ்வா ந: ஸ்வஸ்தயே.

கீழுள்ளதை மூன்று தடவை சொல்லவும். இதற்கு ஸ்வரம் கிடையாது.,ரிக் வேதத்தில். ஆனால் வழக்கத்தில் இருக்கிறது.
ஓம் அத மஹாவ்ரதம் ஓம்.; ஓம். ஏஷ பந்தா: ஓம்.; ஓம். அதாத: சம்ஹிதாயா உபநிஷத் ஓம். ஓம். விதாமக வன்விதா ஓம்.;;

ஓம். மஹாவ்ரதஸ்ய பஞ்சவிம்சதி ஸாமிதேன்ய; ஓம். அதை தஸ்ய சமாம்நாயஸ்ய ஓம். ஓம். உக்தானி வைதானிகானி க்ருஹ்யாணி ஓம்.
ஓம். இஷேத்வோர் ஜேத்வா வாயவஸ்தோ பாயவஸ்த: தேவோவ: ஸவிதா ப்ரார்பயது ச்ரேஷ்டதமாய கர்மணே ஓம்.

ஓம். அக்ன ஆயாஹி வீதயே க்ருணானோ ஹவ்ய தாதயே நிஹோதா ஸத்ஸி பர்ஹிஷி ஓம்.

ஓம். சன்னோ தேவி ரபீஷ்டய ஆபோ பவந்து பீதயே சன்யோர் ரபிஸ்ர வந்துந.ஓம்.: ஓம் ஸமாம்நாய: சமாம்நாத:-ஓம்; ஓம் வருத்திராதைச ஓம்.

ஓம். மயரஸதஜப நலகு ஸம்மிதம்-ஓம்; ஓம் அதசிக்ஷாம் ப்ரவக்ஷ்யாமி-ஓம். ஓம் கௌ:க்மா ஜ்மா க்ஷ்மா-ஓம். ஓம்

பஞ்சஸம்வத்ஸர மயம் –ஓம்; ஓம் அதாதோ தர்ம ஜிஜ்ஞாஸா-ஓம்; ஓம் அதாதோ ப்ரம்ஹ ஜிஜ்ஞாஸா –ஓம்; ஓம் நாராயண நமஸ்க்ருத்ய –ஓம்.;
இரு கைகளையும் கூப்பிக்கொண்டு கீழ் கண்ட மந்திரத்தை மூன்று தடவை சொல்லவும்.

ஓம் நமோ ப்ரம்மணே நமோ அஸ்து அக்னயே நம: ப்ருதிவ்யை

நம:ஓஷதீப்ய: நமோ வாசே நமோ வாசஸ்பதயே நமோ விஷ்ணவே ப்ருஹதே கரோமி.

தேவ ரிஷி பித்ரு தர்ப்பணம் கரிஷ்யே. என்று அப்பா இல்லாதவர்களும் தேவ ரிஷி தர்பணம் கரிஷ்யே என்று அப்பா உள்ளவர்களும் சங்கல்பம் செய்து கொள்ளவும்.

உப வீதி--------பூணல் வலம். நுனி விரல் வழியாக தீர்த்தம் விடவும்.

தேவ தர்ப்பணம்(29)
.....
ப்ரஜாபதிஸ் த்ருப்யது .
ப்ரம்ஹா த்ருப்யது
வேதாஸ் த்ருப்யந்து..
தேவாஸ் த்ருப்யந்து.

ரிஷயஸ் த்ருப்யந்து.
ஸர்வாணி சந்தாம்ஸி த்ருப்யந்து.
ஓம்காரஸ் த்ருப்யது.
வஷட் காரஸ் த்ருப்யது.

வ்யாஹ்ருதயஸ் த்ருப்யந்து.
ஸாவித்ரீ த்ருப்யது.
யக்ஞாஸ் த்ருப்யந்து.

த்யாவா ப்ருத்வீ த்ருப்யேதாம்.
. அந்தரிக்ஷம் த்ருப்யது.
அஹோராத்ராணி த்ருப்யந்து.

ஸாங்க்யாஸ் த்ருப்யந்து
ஸித்தாஸ் த்ருப்யந்து

ஸமுத்ராஸ் த்ருப்யந்து.
நத்யஸ் த்ருப்யந்து.

கிரயஸ் த்ருப்யந்து.
க்ஷேத்ர ஔஷதி வனஸ்பதி
கந்தர்வா அப்ஸரஸ் த்ருப்யந்து.

நாகாஸ் த்ருப்யந்து.
வயாம்ஸி த்ருப்யந்து.
காவஸ் த்ருப்யந்து

ஸாத்யாஸ் த்ருப்யந்து.
விப்ராஸ் த்ருப்யந்து.

ரக்ஷாம்ஸி த்ருப்யந்து
பூதானி த்ருப்யந்து
ஏவமந்தாநி த்ருப்யந்து

ரிஷி தர்ப்பணம்.(12)
பூணலை மாலையாக போட்டுக்கொண்டு சுண்டு விரலின் அடி வழியாக ஜலம் விடவும். ஒவ்வொரு தர்ப்பணமும் இரண்டு முறை மந்திரத்துடன் செய்யவும்

ஸதர்ச்சின: த்ருப்யந்து
மாத்யமா: த்ருப்யந்து.
க்ருத்ஸமத: த்ருப்யது.

விஸ்வாமித்ர: த்ருப்யது.
வாமதேவ: த்ருப்யது.
அத்ரி: த்ருப்யது.

பரத்வாஜ: த்ருப்யது.
வஸிஷ்ட: த்ருப்யது.
ப்ரகாந்தா த்ருப்யந்து.

பாவமான்யா: த்ருப்யந்து.
க்ஷூத்ரஸூக்தா: த்ருப்யந்து
மஹா ஸூக்தா: த்ருப்யந்து
.

பித்ரு தர்ப்பனம்.(36)

ஸுமந்து,ஜைமினி,வைசம்பாயன
பைல சூத்ர,பாஷ்ய,பாரத, மஹா பாரத
தர்மாசார்யா: த்ருப்யந்து

ஜானந்தி-பாவஹி-கார்கிய-கௌதம-
ஷாகல்ய-பாப்ரவ்ய-மாண்டவ்ய-
மாண்டுகேயாஸ் த்ருப்யந்து.

கர்கீ-வாசக்னவீ-த்ருப்யது.
வடபா ப்ராதி தேயீ த்ருப்யது.

ஸுலப மைத்ரேயீ த்ருப்யது.

கஹோளம் தர்பயாமி
கௌஷீதகம் தர்பயாமி
மஹா கௌஷீதகம் தர்பயாமி

பைங்கியம் தர்பயாமி
மஹா பைங்கியம் தர்பயாமி
ஸு யக்ஞம் தர்பயாமி
ஸாங்க்யாயனம் தர்பயாமி.

ஐதரேயம் தர்பயாமி.
மஹைதரேயம் தர்பயாமி

ஷாகலம் தர்பயாமி.
பாஷ்கலம் தர்பயாமி
ஸுஜாதவக்த்ரம் தர்பயாமி.
ஔதவாஹிம் தர்பயாமி.

மஹௌத வாஹிம் தர்பயாமி
சௌஜாமிம் தர்பயாமி
சௌநகம் தர்பயாமி
ஆஷ்வலாயனம் தர்பயாமி

யேசான்யே ஆசார்யா:தே ஸர்வே
த்ருப்யந்து,த்ருப்யந்து,த்ருப்யந்து

அப்பா உள்ளவர்கள் பூணலை வலம் போட்டுக்கொண்டு ஆசமனம் செய்யவும். அப்பா இல்லாதவர்கள் பூணல் இடம் கட்டை விரல் ஆள் காட்டி விரல் இடுக்கு வழியாக 3 முறை தர்ப்பணம் செய்ய வேண்டும்.

பித்ரூன் ஸ்வதா நமஸ் தர்பயாமி
பிதாமஹான் ஸ்வதா நமஸ் தர்பயாமி
ப்ரபிதா மஹான் ஸ்வதா நமஸ் தர்பயாமி

மாத்ரூ: ஸ்வதா நமஸ் தர்பயாமி
பிதாமஹீ ஸ்வதா நமஸ் தர்பயாமி
ப்ரபிதா மஹி ஸ்வதா நமஸ் தர்பயாமி

மாதா மஹான் ஸ்வதா நமஸ் தர்பயாமி

மாது:பிதா மஹான் ஸ்வதா நமஸ் தர்பயாமி
மாது: ப்ரபிதா மஹான் ஸ்வதா நமஸ் தர்பயாமி

மாதா மஹி ஸ்வதா நமஸ் தர்பயாமி
மாது: பிதாமஹீ ஸ்வதா நமஸ் தர்பயாமி
மாது: ப்ரபிதாமஹீ ஸ்வதா நமஸ் தர்ப்பயாமி

பூணல் வலம் ஆசமனம்.

.
ருக் வேதம் ஸமித்தா தானம்.

ஆசமனம்: அச்யுதாய நம: அனந்தாய நம: கோவிந்தாய நமஹ;

கேசவ, நாராயண என்று கட்டை விரலால் வலது இடது கன்னங்களையும் மாதவ கோவிந்த என்று பவித்ர விரலால் வலது இடது கண்களையும்

விஷ்ணோ மதுஸூதன என்று ஆள் காட்டி விரலால் வலது இடது மூக்குகளையும்,த்ரிவிக்ரம வாமன என்று சுண்டு விரலால் வலது இடது காதுகளையும் ஸ்ரீதர ஹ்ரிஷீகேஸ என்று நடு விரலால் வலது இடது

தோள்களையும் எல்லா விரல்களாலும் பத்மநாப என்று கூறி மார்பிலும், தாமோதர என்று கூறி எல்லா விரல்களாலும் சிரஸிலும் தொடவேண்டும்.

ஸுக்லாம்பரதரம் விஷ்ணும் ஸசி வர்ணம் சதுர்புஜம், ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்ன உப ஷாந்தயே.

ப்ராணாயாமம். ஓபூ: ஓ புவ: ஓகும் ஸுவ: ஓ மஹ: ஓஜன: ஓதப: ஓகும் ஸத்யம்; ஓ தத்ஸவிதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீ மஹி தியோ யோனஹ ப்ரசோதயாத். ஓமாபோ ஜ்யோதீ ரஸோ அம்ருதம் ப்ரஹ்ம பூர்புவஸ்ஸுவரோம்.;

மமோபாத்த ஸமஸ்த துரிதயக் ஷயத்வார ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் ப்ராத: சமிதாதானம் கரிஷ்யே. (ஸாயங்காலத்தில் ) ஸாயம் ஸமிதாதானம் கரிஷ்யே.

அப உப ஸ்பர்ஸ்ய என்று கையினால் ஜலத்தை தொட வேண்டும்.

அக்னியை ஜ்வாலை செய்து , அக்னியின் முன்னிலையில் ஜலத்தை வலது கையில் எடுத்துக்கொண்டு பூர்புவஸ்ஸுவஹ என்று சொல்லிக் கொண்டு மூன்று தடவை ஜலத்தினால் அக்னியை பரிஸேஷனம் செய்யவும்.

ஒரு சமித்தை எடுத்துகொண்டு
அக்னயே சமித மித்யஸ்ய ஹிரண்ய கர்ப ரிஷி: த்ருஷ்டுப் சந்த: அக்னிர் தேவதா,

சமிதா தானே வினியோக:
அக்னயே ஸமிதம் ஆஹார்ஷம் ப்ருஹதே ஜாதவேதஸே தயாத்வம் அக்னே வர்த்தஸ்வ ஸமிதா ப்ரஹ்மணா வயம் ஸ்வாஹா, அக்னயே ஜாத வேதஸே இதம் ந மம.

என்று சொல்லி கைகளில் ஒரு உத்திரிணி ஜலம் விட்டு இரு கை களையும் அக்னியில் காண்பித்து தேஜஸா மா ஸமனஜ்மி என்று சொல்லி முகத்தை துடைத்து கொள்ளவும்.

இப்படி மூன்று முறை சொல்லி முகத்தை துடைத்து கொள்ளவும். பிறகு ஸ்வாஹா என்று சொல்லி ஸமித்தை அக்னியில் வைக்கவும்.

அக்னே: உபஸ்தானம் கரிஷ்யே என்று சொல்லி எழுந்து நின்றுக் கொண்டு
மயீ மேதாம் மயி ப்ரஜாம் மய்யக்னி ஸ்தேஜோ ததாது.// மயி மேதாம் மயி ப்ரஜாம் மயீந்த்ர: இந்த்ரியம் ததாது./ மயி மேதாம் மயி ப்ரஜாம் மயி ஸூர்யோ ப்ரஜோ ததாது.

யத்தே அக்னே தேஜஸ்தேன அஹம் தேஜஸ்வி பூயாஸம் . ,யத்தே அக்னே வர்சஸ்தேன அஹம் வர்ச்சஸ்வி பூயாஸம். யத்தே அக்னே ஹரஸ் தேன அஹம் ஹரஸ்வி பூயாஸம்.

ஓ ச மே ஸ்வரஸ் சமே யக்ஞோபசதே நமச்ச/ யத்தே ந்யூனம் தஸ்மை தே உபயத்தே அதிரிக்தம் தஸ்மை தே உபயத் தே அதிரிக்தம் தஸ்மைதே நம:

மந்த்ர ஹீனம் க்ரியா ஹீனம் பக்தி ஹீனம் ஹூதாஸன யத்துதந்து மயா தேவ பரிபூர்ணம் த தஸ்துதே; ப்ராயஸ் சித்தானி அஷேஷாணி தப: கர்மஆத்ம கானி வை யானி தேஷாம் அஸே ஷாணாம் க்ருஷ்ணானு ஸ்மரணம் பரம்.. க்ருஷ்ண, க்ருஷ்ண, க்ருஷ்ண.

பிறகு ஹோம பஸ்மாவை எடுத்து இடது கையில் வைத்து சிறிது ஜலம் விட்டு வலது கை மோதிர விரலால் குழைத்து கொள்ளும் பொழுது
மானஸ் தோகே தனயே மான ஆயுஷி மானோ கோஷு மானோ அஸ்வேஷு ரீரிஷ; வீரான் மானோ ருத்ர பாமிதோ வதீர் ஹவிஷ்மந்த: ஸதமித்வ ஹவாமஹே என்று பஸ்மத்தை எடுத்து தரித்து கொள்ளவும்.

மேதாவி பூயாஸம் (நெற்றியில்) தேஜஸ்வீ பூயாஸம் (மார்பில்). வர்ச்சஸ்வீ பூயாஸம் (வலது தோளில்) ப்ரம்ம வர்ச்சஸ்வீ பூயாஸம் (இடது தோளில்) ஆயுஷ்மான் பூயாஸம்((கழுத்தில்) அன்னாத: பூயாஸம் (வயிற்றில்) ஸ்வஸ்தி பூயாஸம் (ஸிரஸில்).

பிறகு கைகளை அலம்பிக்கொண்டு கைகளை கூப்பி அக்னியை கீழ்கண்டவாறு

ப்ரார்திக்கவும்.

ஸ்வஸ்தி ஸ்ரத்தாம் மேதாம் யச: ப்ரஞ்ஞாம் வித்யாம் புத்திம் ஷ்ரியம் பலம் ஆயுஷ்யம் தேஜ ஆரோக்யம் தேஹிமே ஹவ்யவாஹன.

பிறகு காயேன வாசா மனஸா இந்த்ரியையர்வா புத்யாத்மனாவா ப்ரக்ருதே ஸ்வபாவாத் கரோமி யத்யத் ஸகலம் பரஸ்மை ஸ்ரீ மன் நாராயணா யேதி ஸமர்பயாமி

மயா க்ருதம் ப்ராத:/ஸாயம் (காலை/ மாலை) ஸமிதா தானாக்யம் கர்ம ஒம் தத்ஸத் ப்ருஹ்மார்பணம் அஸ்து. என்று ஒரு உத்திரிணி ஜலம் கையில் விட்டு தரையில் விடவும்.

உபாகர்மா மஹா சங்கல்பம். 18-08-2016, வெள்ளீ கிழமை.// வியாழக்கிழமை 17-08-16 ருக் வேதிகளுக்கு

கை கால் அலம்பி ஸுத்தமான இடத்தில் அமர்ந்து ஆசமனம் செய்து, பவித்ரம் தரித்து சில தர்பங்களை ஆஸனமாக போட்டுக்கொண்டு சில தர்பங்களை பவித்ரத்துடன் சேர்த்து இடுக்கி கொண்டு

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசி வர்ணம் சதுர்புஜம் ப்ரசன்ன வதனம் த்யாயேத் சர்வ விக்னோப சாந்தயே .நெற்றியில் 5 தடவை குட்டிக்கொள்ளவும்

.ஓம்பூ: ஓம்புவ: ஓகும் ஸுவ: ஒம் மஹ: ஒம்ஜன: ஓம் தப: ஓகும் சத்யம். ஓம் தத்ஸ விதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீ மஹி தியோ யோன: ப்ரசோதயாத் ஓ ஆபோ ஜ்யோதிரஸோ அம்ருதம் ப்ரஹ்மா ஓம் பூர்புவஸுவரோம்.

மமோ பாத்த ஸமஸ்த துரிதயக் ஷயத்துவார ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் ததேவ லக்னம் ஸுதினம் ததேவா தாரா பலம் சந்த்ர பலம் ததேவா வித்யா பலம் தைவ பலம் ததேவா லக்ஷ்மீபதே அங்க்ரியுகம் ஸ்மராமி;

அபவித்ர: பவித்ரோவா: ஸர்வாவஸ்தாம் கதோபிவா ய:ஸ் மரேத் புண்டரீ காக்ஷம் ஸபாஹ்ய அப்யந்த்திர ஸுசி: மாநஸம் வாசிகம் பாபம், கர்மனா ஸமுபார்ஜிதம் ஸ்ரீ ராம ஸ்மரணேநைவ வ்யபோஹதி; ந ஸம்சய:

ஸ்ரீ ராமா, ராம, ராம, திதிர் விஷ்ணு; ததா வார: நக்ஷத்ரம் விஷ்ணுரேவச. யோகஸ்ச கரணம் சைவ ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத் ஸ்ரீ கோவிந்த, கோவிந்த, கோவிந்த அத்ய ஸ்ரீ பகவத: ஆதி விஷ்ணோ ஆதி நாராயணஸ்ய
அசிந்த்யயா அபரிமிதயா சக்த்யா ப்ரியமானஸ்ய மஹா ஜலௌகஸ்ய மத்யே பரி

ப்ரமதாம் அநேக கோடி ப்ரஹ்மாண்டானாம் ஏகதமே அவ்யக்த மஹத் அஹங்கார ப்ருத்வீ அப்பு தேஜ: வாயு; ஆகாஷாத்யை: ஆவரணை;

ஆவ்ருதே அஸ்மிந் மஹதி. ப்ருஹ்மாண்ட கடாஹாந்த்ரே மத்யே பூ மண்டலே ஆதார சக்தி ஆதி கூர்மாதி அநந்தாதி அஷ்ட திக் கஜோபரி ப்ரதிஷ்டிதஸ்ய உபரிப்ரதிஷ்டிதே அதல விதல சுதல தலாதல ரஸாதல மஹாதல,பாதாலாக்யானாம் ஸப்தானாம் லோகானாம் உபரி தலபாகே புண்ய க்ருத் நிவாஸ பூதானாம் ஸத்ய,தபோ ஜன மஹஹ ஸ்வர் புவ லோகானாம் ஷண்ணாம் அதோபாகே மஹாநாளாய மான

பணிராஜ சேஷஸ்ய ஸஹஸ்ர பணாபணி மண்டல வித்ருதே: லோகா லோகா சலேன வலயிதே திக்தந்தி ஸுண்ட தண்டாத் உத்தம்பிதே லவண இக்ஷு ஸுரா ஸர்பி ததி க்ஷீர ஸ்வாதூத கார்ணவைஹி பரிக்ஷிப்தே ஜம்பூ ப்லக்ஷ சாக

சால்மலி குஷ க்ரௌஞ்ச ஷாக புஷ்கராக்ய ஸப்த த்வீப விராஜிதே பஞ்சாசத் கோடி விஸ்தீர்ணே பூமண்டலே பாரத ஹரி வருஷ இலாவ்ருத ரம்யக ஹிரண்மய குரு பத்ராஸ்வ கேது மாலாக்யைஹி நவபிஹி கண்டைருபசோபிதே மஹாஸரோரு ஹாகாரே லக்ஷ யோஜன விஸ்தீர்ணே கிம்புருஷ இந்த்ர கஸேரு தாம்ர கபஸ்தி நாக ஸௌம்ய கந்தர்வ சாரண பாரதாதி நவ கண்டாத்மகே மஹாமேரு கிரிகர்ணிகோ பேத மஹா ஸரோரு

ஹாயமான பஞ்சாஷத் கோடி யோஜந விஸ்தீர்ண பூ மண்டலே ஸு மேரு நிஷத ஹேமகூட ஹிமாசல மால்யவதி பாரியாத்ரக கந்தமாதந கைலாஸ விந்த்யா சலாதி மஹாஷைல அதிஷ்டிதே லவண ஸமுத்ர முத்ரிதே பாரத

கிம்புருஷ ஹரி இலாவ்ருத ரம்யக ஹிரண்மய குரு பத்ராஷ்வ ஸேது மாலாக்ய நவ வர்ஷோப ஷோபிதே ஜம்பு த்வீபே பாரத வர்ஷே பரத:கண்டே மேரோ: தக்ஷிணே பார்ஷ்வே கர்மபூமௌ ஸாம்யவந்தி குருக்ஷேத்ராதி

ஸம பூமத்ய ரேகாயா:பூர்வ திக் பாகே விந்த்யா சலஸ்ய தக்ஷிண திக் பாகே தண்ட காரண்யே கோதாவர்யா: தக்ஷிணே தீரே ஸகல ஜகத் ஸ்ரஷ்டு::பரார் தத்வய ஜீவின: ப்ருஹ்மண: ப்ரதமே பரார்தே பஞ்சாஸத்

அப்தாத்மிகே அதீதே த்வீதீயே பரார்தே பஞ்சாசத் அப்தாதௌ ப்ரதமே வர்ஷே ப்ரதமே மாஸே ப்ரதமே பக்ஷே ப்ரதமே திவஸே அஹனி த்விதீயே யாமே த்ருதீயே முஹூர்த்தே ஸ்வாயம்புவ ஸ்வாரோசிஷ உத்தம தாமஸ

ரைவத சாக்ஷூ ஷாக்யேஷூ ஷட்ஸு மநுஸு அதீதேஷூ ஸப்தமே வைவஸ்வத மந்வந்த்ரே அஷ்டா விம்ஷதீ தமே வர்த்தமானே கலி யுகே ப்ரதமே பாதே ஷாலி வாஹந சகாப்தே சாந்த்ர ஸாவர ஸௌராதி மான ப்ரமிதே
ப்ரபவாதீநாம் ஷஷ்ட்யா: ஸம்வத் ஸராணாம் மத்யே துர்முகி நாம ஸம்வத்ஸரே

Credits: www.tamilbrahmins.com

தக்ஷிணாயனே வர்ஷ ருதௌ ஸிம்ஹ மாஸே ஷுக்ல பக்ஷே பூர்ணிமாயாம் ஸுப திதௌ குரு வாஸர ஷ்ரவிஷ்டா நக்ஷத்ர யுக்தாயாம்

ஷோபன நாம யோக பவ கரண ஏவங்குண விஷேஷேண விஷிஷ்டாயாம் அஸ்யாம் வர்த்த மானாயாம் பூர்ணிமாயாம் ஸுப திதௌ மமோ பாத்த ஸமஸ்த துரிதயக் ஷயத்வார ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் அநாதி அவித்யா வாஸனயா ப்ரவர்த்தமானே அஸ்மின் மஹதி ஸம்ஸாரசக்ரே விசித்ராபிஹி

கர்மகதிபிஹி விசித்ராஸு யோநிஷு புந:புந: அனேகதா ஜநித்வா கேநாபி புண்ய கர்ம விசேஷேண இதாநீந்தன மாநுஷ்யே த்வி ஜன்ம விஷேஷம் ப்ராப்தவத: மம இஹ ஜந்மநி பூர்வ ஜந்மஸு ஜந்ம ஜந்மாந்தரேஷு பால்யே

வயஸி கௌமாரே யௌவனே வார்தகேச ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷூப்தி அவஸ்தாஸு மநோ வாக்காய கர்மேந்திரிய ஞானேந்திரிய வ்யாபாரை: ஸம்பாவிதானாம் அதிபாதகானாம் உப பாதகானாம் ரஹஸ்ய க்ருதாநாம்

ப்ரகாச க்ருதாநாம் சங்கலீகரணாநாம், மலிநீ கரணாநாம்,அபாத்ரீ கரணாநாம் ஜாதி ப்ரம்சகராநாம், ப்ரகீர்ணகாநாம் ஏவம் நவானாம், நவவிதானாம் பஹூநாம் பஹூவிதாநாம் ஸர்வேஷாம் பாபானாம் ஸத்ய: அபனோதன

த்வாரா ஸமஸ்த பாப க்ஷயார்த்தம் ஸமஸ்த ஹரி ஹர தேவதா ஸந்நிதௌ தேவ ப்ராஹ்மண சந்நிதௌ ஷ்ராவண்யாம் பௌர்ண மாஸ்யாம் அத்யாய

உபாகர்ம, கர்ம கரிஷ்யே. ததங்கம் பாப க்ஷயார்த்தம் மாத்யானிக/ மஹாநதி ஸ்நானம் அஹம் கரிஷ்யே.. (ப்ரோக்ஷண ஸ்நானம் அஹம் கரிஷ்யே). கட்டை புல்லை வடக்கே போடவும். பவித்ரம் காதில் வைத்துக்கொள்ளவும்.

அதி க்ரூர மஹா காய கல்பாந்த தஹநோபம. பைரவாய நமஸ்துப்யம் அநுஞ்யாம் தாது மர்ஹஸி.. முறையாக ஸ்நானம் செய்யவும், அல்லது ஆபோஹிஷ்டா மந்திரம் சொல்லி தீர்த்தம் ப்ரோக்ஷித்து கொள்ளவும்.

ஆபோஹிஷ்டேதி த்ரயர்ச்சஸ்ய ஸூக்தஸ்ய சிந்து த்வீப ரிஷி . ஆபோ தேவதா , காயத்ரீ சந்தஹ அபாம் மார்ஜனே வினியோகஹ,
ஆபோஹிஷ்டா மயோ புவஹ ஸ்தான ஊர்ஜே ததாதனஹ மஹேரணாய சக்ஷஸே. யோ வஹ சிவதோமோ ரஸஹ தஸ்ய பாஜயதே ஹனஹ; உசத்தீரிவ மாதரஹ தஸ்மா அரங்க மாமவோ யஸ்யக்ஷயாய ஜின்வதா ஆபோ ஜனயாதாஜனஹ

இமம்மே கங்கே யமுனே சரஸ்வதி சு துத்ரி ஸ்தோமம் ஸ ச தா பருஷ்ண்யாஹா அஸிக்ண்யா மருத்வ்ருதே விதஸ்த யார்ஜீகீயே ஷ்ருணுஹ்யா ஸுஷோமயா

அபவித்ர பவித்ரோவா சர்வாவஸ்தாம் கதோபிவா யஸ் ஸ்மரேத் புண் டரீ காக்ஷம் ஸபாஹ்யா அப்யந்த்ர ஸுசிஹி.

கங்கே ச யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி நர்மதே ஸிந்து காவேரி ஜலேஸ்மின் ஸன்னதிங்குரு. கங்கா கங்கேதி யோ ப்ரூயாத் யோஜனானாம் சதைரபி.முச்யதே ஸர்வ  பாபேப்யோ விஷ்ணு லோகம் ஸ கச்சதி.

துர் போஜன துராலாப துஷ் ப்ரதிக்ரஹ ஸம்பவம். பாபம் ஹர மம க்ஷிப்ரம் ஸஹ்ய கன்யே நமோஸ்துதே. த்ரி ராத்ரம் ஜாஹ்னவி தோயம் பாஞ்ச ராத்ரம் துயாமுனம். ஸத்ய:புனாது காவேரி பாபமா மரணாந்திகம்.

கங்கே கங்கேதி யோ ப்ரூயாத் யோஜனானாம் ஷதைரபி முச்யதே ஸர்வ பாபேப்யோ சிவலோகம் ஸ கச்சதி.

நந்திநி நளினி ஸீதா மாலதீ ச மலாபஹா ,விஷ்ணு பாதாப்ஜ ஸம்பூதா கங்கா த்ரிபத காமினி. புஷ்கராத்யானி தீர்தாநி கங்காத்யா: ஸரிதஸ்ததா ஆகச்சந்து பவித்ராணி ஸ்நான காலே ஸதா மம.

பிறகு பவித்திரத்தை கழற்றி வைத்துவிட்டு ஸ்னானம் செய்து மடி வஸ்த்ரம் தரித்து விபூதி/ சந்தனம் –தரித்து பவித்ரம் போட்டுக்கொண்டு காண்ட ரிஷி தர்ப்பணம் செய்ய வேண்டும்.

.

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசி வர்ணம் சதுர் புஜம் ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்ன உபசாந்தயே.

.ஓம்பூ: ஓம்புவ: ஓகும் ஸுவ: ஓம் மஹ: ஓம்ஜன: ஓம் தப: ஓகும் சத்யம். ஓம் தத்ஸ விதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீ மஹி தியோ யோன: ப்ரசோதயாத் ஓம் ஆபோ ஜ்யோதிரஸோ அம்ருதம் ப்ரஹ்மா ஓம் பூர்புவஸுவரோம்.

மமோ பாத்த ஸமஸ்த துரிதயக் ஷயத்துவார ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் ஏதேஷாம் க்ருஹஸ்தானாம் ப்ருஹ்மசாரினாம் மம ச அதீதானாம் வேதானாம் அயாதயா மத்வாய அத்யேஷ்ய மாணாநாம் சந்தஸாம் ச வீரயத்வாய ஸ்ராவண்யாம்

ஸ்ரவண நக்ஷத்ரே அத்யாய உபாகரன கர்மாங்கம் சாவித்ர்யாதி நவப்ரதான தேவதானாம் அக்ன்யாதி விம்சதி மண்டல தேவதானாம் ப்ருஹ்மயஞ்க்ய தேவாதீனாம் ச தர்பணம் கரிஷ்யே. கையை துடைத்து கொள்ளவும்.

அக்ஷதை எடுத்துகொண்டு தேவ தர்பணம் நான்கு நுனி விரல்களால் செய்யவும்.
ஓம் சாவித்ரீம் தர்பயாமி; ஓம் ப்ருஹ்மானம் தர்பயாமி; ஓம் ஸ்ரத்தாம் தர்பயாமி;
ஓம் மேதாம் தர்பயாமி; ஓம் ப்ரஞ்ஞாம் தர்பயாமி; ஓம் தாரணாம் தர்பயாமி;

ஓம் ஸதஸஸ்பதிம் தர்பயாமி; ஓம் அனுமதிம் தர்பயாமி; ஓம் சந்தாம்சி ருஷீன் தர்பயாமி; ஓம் அக்னிம் தர்பயாமி; அப்த்ருணசூர்யான் தர்பயாமி; அக்னிம் தர்பயாமி; சகுந்தம் தர்பயாமி; அக்னிம் தர்பயாமி; மித்ரா வருணௌ தர்ப்யாமி; அக்னிம்

தர்பயாமி; அபஹ் தர்பயாமி அக்னி தர்பயாமி ;மருதஹ் தர்பயாமி அக்னிம் தர்பயாமி \தேவான் ப்ருஹ்ம ச தர்பயாமி; அக்னிம் தர்பயாமி; இந்த்ராஸோமௌ தர்பயாமி; இந்த்ரம் தர்பயாமி; அக்னா மருதௌ தர்பயாமி; பவமானம் ஸோமம் தர்பயாமி; பவமான ஸோமம் தர்பயாமி; அக்னிம் தர்பயாமி; சம்ஞானம் தர்பயாமி

பூணூலை வலது கட்டை விரலில் பிடித்துகொண்டு அக்ஷதை சேர்த்து நேராக தர்பணம் செய்யவும்.நுனி விரல்களால் .

உப வீதி--------பூணல் வலம். நுனி விரல் வழியாக தீர்த்தம் விடவும்.

தேவ தர்ப்பணம்(29)

ப்ரஜாபதிஸ் த்ருப்யது .
ப்ரம்ஹா த்ருப்யது
வேதாஸ் த்ருப்யந்து..
தேவாஸ் த்ருப்யந்து.

ரிஷயஸ் த்ருப்யந்து.
ஸர்வாணி சந்தாம்ஸி த்ருப்யந்து.
ஓம்காரஸ் த்ருப்யது.
வஷட் காரஸ் த்ருப்யது.

வ்யாஹ்ருதயஸ் த்ருப்யந்து.
ஸாவித்ரீ த்ருப்யது.
யக்ஞாஸ் த்ருப்யந்து.

த்யாவா ப்ருத்வீ த்ருப்யேதாம்.
. அந்தரிக்ஷம் த்ருப்யது.
அஹோராத்ராணி த்ருப்யந்து.

ஸாங்க்யாஸ் த்ருப்யந்து
ஸித்தாஸ் த்ருப்யந்து

ஸமுத்ராஸ் த்ருப்யந்து.
நத்யஸ் த்ருப்யந்து.

கிரயஸ் த்ருப்யந்து.
க்ஷேத்ர ஔஷதி வனஸ்பதி
கந்தர்வா அப்ஸரஸ் த்ருப்யந்து.

நாகாஸ் த்ருப்யந்து.
வயாம்ஸி த்ருப்யந்து.
காவஸ் த்ருப்யந்து

ஸாத்யாஸ் த்ருப்யந்து.
விப்ராஸ் த்ருப்யந்து.
யக்ஷாஸ் த்ருப்யந்து

3.
ரக்ஷாம்ஸி த்ருப்யந்து
பூதானி த்ருப்யந்து
ஏவமந்தாநி த்ருப்யந்து

ரிஷி தர்ப்பணம்.(12)
பூணலை மாலையாக போட்டுக்கொண்டு சுண்டு விரலின் அடி வழியாக ஜலம் விடவும். ஒவ்வொரு தர்ப்பணமும் இரண்டு முறை மந்திரத்துடன் செய்யவும்

ஸதர்ச்சின: த்ருப்யந்து
மாத்யமா: த்ருப்யந்து.
க்ருத்ஸமத: த்ருப்யது.

விஸ்வாமித்ர: த்ருப்யது.
வாமதேவ: த்ருப்யது.
அத்ரி: த்ருப்யது.

பரத்வாஜ: த்ருப்யது.

Credits: www.tamilbrahmins.com

வஸிஷ்ட: த்ருப்யது.
ப்ரகாந்தா த்ருப்யந்து.

பாவமான்யா: த்ருப்யந்து.
க்ஷூத்ரஸூக்தா: த்ருப்யந்து
மஹா ஸூக்தா: த்ருப்யந்து
.

பித்ரு தர்ப்பனம்.(36)பூணல் இடம் ஒவ்வொன்றும் 3 தடவை செய்யவும். எள்ளு அக்ஷதையுடன்.

ஸுமந்து,ஜைமினி,வைசம்பாயன
பைல சூத்ர,பாஷ்ய,பாரத, மஹா பாரத
தர்மாசார்யா: த்ருப்யந்து த்ருப்யந்து த்ருப்யந்து

ஜானந்தி-பாவஹி-கார்கிய-கௌதம-
ஷாகல்ய-பாப்ரவ்ய-மாண்டவ்ய-
மாண்டுகேயாஸ் த்ருப்யந்து.த்ருப்யந்து த்ருப்யந்து

கர்கீ-வாசக்னவீ-த்ருப்யது. த்ருப்யது த்ருப்யது
வடபா ப்ராதி தேயீ த்ருப்யது. த்ருப்யது த்ருப்யது
ஸுலப மைத்ரேயீ த்ருப்யது. த்ருப்யது த்ருப்யது

கஹோளம் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி
கௌஷீதகம் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி
மஹா கௌஷீதகம் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி

பைங்கியம் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி
மஹா பைங்கியம் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி
ஸு யக்ஞம் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி
ஸாங்க்யாயனம் தர்பயாமி. தர்பயாமி தர்பயாமி

ஐதரேயம் தர்பயாமி. தர்பயாமி தர்பயாமி
மஹைதரேயம் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி

ஷாகலம் தர்பயாமி. தர்பயாமி தர்பயாமி
பாஷ்கலம் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி
ஸுஜாதவக்த்ரம் தர்பயாமி. தர்பயாமி தர்பயாமி
ஔதவாஹிம் தர்பயாமி தர்பயாமி தர்ப\யாமி.

மஹௌத வாஹிம் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி

ஸௌஜாமிம் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி
ஸௌநகம் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி
ஆஷ்வலாயனம் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி

யேசான்யே ஆசார்யா:தே ஸர்வே
த்ருப்யந்து,த்ருப்யந்து,த்ருப்யந்து

அப்பா உள்ளவர்கள் பூணலை வலம் போட்டுக்கொண்டு ஆசமனம் செய்யவும். அப்பா இல்லாதவர்கள் பூணல் இடம் கட்டை விரல் ஆள் காட்டி விரல் இடுக்கு வழியாக எள்ளு மட்டும் எடுத்து கொண்டு 3 முறை தர்ப்பணம் செய்ய வேண்டும்.பித்ரு தர்பணம்.

பித்ரூன் ஸ்வதா நமஸ் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி பிதாமஹான் ஸ்வதா நமஸ் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி
ப்ரபிதா மஹான் ஸ்வதா நமஸ் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி

மாத்ரூ: ஸ்வதா நமஸ் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி
பிதாமஹீ ஸ்வதா நமஸ் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி
ப்ரபிதா மஹி ஸ்வதா நமஸ் தர்பயாமிதர்பயாமி தர்பயாமி

மாதா மஹான் ஸ்வதா நமஸ் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி
மாது:பிதா மஹான் ஸ்வதா நமஸ் தர்பயாமி தர்பயாமி ஹர்பயாமி
மாது: ப்ரபிதா மஹான் ஸ்வதா நமஸ் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி

மாதா மஹி ஸ்வதா நமஸ் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி
மாது: பிதாமஹீ ஸ்வதா நமஸ் தர்பயாமி தர்பயாமி தர்பயாமி
மாது: ப்ரபிதாமஹீ ஸ்வதா நமஸ் தர்ப்பயாமி தர்பயாமி தர்பயாமி

யத்ர க்வசன சம்ஸ்தாநாம் க்ஷூத்ரு ஸ்ணோப ஹதாத் மனாம்----பூதானாம் த்ருப்யதே தோயம் இதமஸ்து யதா சுகம். த்ருப்யத த்ருப்யத த்ருப்யதா

பூணல் வலம் பவித்ரம் காதில். ஆசமனம். இரு முறை,பவித்ரம் கையில் போட்டுக்கொள்ளவும்.

பின் வரும் மந்திரத்தை கூறி தயிர் கலந்த சத்து மாவை பல்லில் படாமல் சாப்பிடவும்.

ஸக்துமிவ இதயஸ்ய மந்த்ரஸ்ய ப்ருஹஸ்பதிர் ரிஷி ; பரப்ருஹ்மஞானம் தேவதா த்ரிஷ்டுப் சந்தஹ ; த்திஸக்துப்ராசனே வினியோகஹ

ஸக்துமிவதித உனாபுனந்தோ யத்ரதீதரா மனஸா வாசமக்ரதஹ அத்ராசகாயஹா

ஸக்யானி ஜானதே பத்ரைஷாம் லக்ஷ்மீர் நிஹிதாதிவாசி

கை அலம்பி ஆசமனம் செய்து பவித்ரம் அணிந்து கொள்ளவும்.

புது பூணல் போட்டுகொள்ளல்.

.
யக்ஞோபவீத தாரண மந்த்ரம்.

ஆசமனம். அச்யுதாய நம: அனந்தாய நம: கோவிந்தாய நம:. உள்ளங் கையில் உத்திரிணி ஜலம் விட்டு ப்ரும்ஹ தீர்த்தத்தால் அருந்தவும்.
கேசவ ,நாராயண என்று கட்டை விரலால் வலது, இடது கன்னங்களையும்,.மாதவ கோவிந்த என்று பவித்ர விரலால் வலது, இடது கண்களையும்,

விஷ்ணோ ,மதுசூதனா என்று ஆள் காட்டி விரலால் வலது, இடது மூக்கையும், ,
த்ரிவிக்ரம ,வாமன என்று சுண்டு விரலால் வலது, இடது காதுகளையும்,,
ஸ்ரீதர, ஹ்ரிஷீகேஸ என்று நடு விரலால் வலது, இடது தோள்களையும் பத்மநாபா என்று எல்லா விரல்கலால் மார்பிலும், தாமோதரா என்று எல்லா விரல்கலாலும் சிரஸிலும் தொட வேண்டும்.

, பவித்ரம் தரித்து சில தர்பங்களை ஆஸனமாக போட்டுக் கொண்டு சில தர்பங்களை பவித்ரத்துடன் சேர்த்து இடுக்கிக் கொண்டு

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசி வர்ணம் சதுர்புஜம் ப்ரசன்ன வதனம் த்யாயேத் சர்வ விக்னோப சாந்தயே நெற்றியில் 5 தடவை குட்டிக்கொள்ளவும்

.ஓம்பூ: ஓம்புவ: ஓகும் ஸுவ: ஓம் மஹ: ஓம்ஜன: ஓம் தப: ஓகும் சத்யம். ஓம் தத்ஸ விதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீ மஹி தியோ யோன: ப்ரசோதயாத் ஓம் ஆபோ ஜ்யோதிரஸோ அம்ருதம் ப்ரஹ்மா ஓம் பூர்புவஸுவரோம்.

மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வார ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத் யர்தம் ஏதேஷாம் க்ருஹஸ் தானாம் ப்ருஹ்மசாரிணாம் மம ச அதீதானாம் வேதானாம் அயாத்யாமத்வாய அத்யேஷ்ய மானானாம் சந்தசாம் சவீர்யத்வாய ஸ்ராவண்யாம் ஸ்ரவண நக்ஷத்ரே அத்யாய உபாகர்மாங்கம் யக்ஞோப வீத தாரணம் கரிஷ்யே

தீர்தத்தை தொடவும்.
அஸ்ய ஸ்ரீ யக்யோப வீத தாரண மஹா மந்த்ரஸ்ய பர ப்ருஹ்ம ரிஷி : என்று சொல்லி வலது கை விரலால் (ஸிரஸ்) தலையை தொடவும்
.த்ருஷ்டுப் சந்த;:என்று சொல்லி மூக்கை தொடவும்.

Credits: www.tamilbrahmins.com

பரமாத்மா தேவதா; என்று சொல்லி மார்பை தொடவும்.

யஞ்யோப வீத தாரணே வினியோக: என்று சொல்லவும்.

பூணூல் ஒன்றை பிரித்து எடுத்து ப்ரும்ஹ முடிச்சை மோதிர விரலில் படும் படியாக மேலாக வைத்து வலது உள்ளங் கையினால் தாங்கியும் , இடது உள்ளங் கையினால் பூணூலின் கீழ் புறத்தை அழுத்தியும் பிடித்து கொண்டு
யக்ஞோபவீதம் பரமம் பவித்ரம் ப்ரஜாபதே: யத் ஸஹஜம் புரஸ்தாத் ஆயுஷ்யம் அக்ரியம் ப்ரதிமுஞ்ச சுப்ரம் யக்ஞோப வீதம் பலமஸ்து தேஜ;:

என்று சொல்லி பூணூலை தரித்து கொள்ளவும்.. இதே வீதம் விவாஹம் ஆனவர்கள் இரண்டாவது, மூண்றாவது பூணூலையும் மந்த்ரத்தை சொல்லி தரித்து கொள்ளவும்.

ஆசமனம் செய்யவும். ஆசமனம் செய்யும் போதெல்லாம் பவித்ரம் வலது காதில் வைத்து கொள்ள வேண்டும்

இந்த மந்த்ரத்தை சொல்லி பழைய பூணலை கழற்றி வடக்கில் போடவும்.

உபவீதம் பின்னதந்தும் ஜீரணம் கஷ்மல தூஷிதம் விஸ்ருஜாமி ஜலே ப்ரஹ்ம வர்ச்சோ தீர்க்காயு ரஸ்துமே. மறுபடியும் ஆசமனம் செய்யவும்.

வேதாரம்பம்;_
சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசி வர்ணம் சதுர்புஜம் ப்ரசன்ன வதனம் த்யாயேத் சர்வ விக்னோப சாந்தயே நெற்றியில் 5 தடவை குட்டிக்கொள்ளவும்

.ஓம்பூ: ஓம்புவ: ஓகும் ஸுவ: ஓம் மஹ: ஒம்ஜன: ஓம் தப: ஓகும் சத்யம். ஓம் தத்ஸ விதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீ மஹி தியோ யோன: ப்ரசோதயாத் ஓம் ஆபோ ஜ்யோதிரஸோ அம்ருதம் ப்ரஹ்மா ஓம் பூர் புவ ஸுவ ரோம்.

மமோபாத்த ஸமஸ்த துரிதக்ஷயத்வார ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்தம் ஏதேஷாம் க்ருஹஸ்தானாம் ப்ருஹ்மசாரிணாம் மம ச அதீதானாம் வேதானாம்

அயாத்யாமத்வாய அத்யேஷ்யமானானாம் சந்தசாம் சவீர்யத்வாய ஸ்ராவண்யாம் ஸ்ரவண நக்ஷத்ரே அத்யாய உபாகரண கர்மாங்கம் வேதாரம்பம் கரிஷ்யே.

கைகளை துடைத்து கொள்ளவும்.முத்லில் காயத்திரி மந்திரத்தை மூன்று முறை ஜபிக்கவும்.

அக்னி மீளேத்யஸ்ய நவர்சஸ்ய ஸுக்தஸ்ய மதுசந்த ருஷி; காயத்ரி சந்த;அக்னிர் தேவதா.

Credits: www.tamilbrahmins.com

ஓம் அக்னி மீளே ப்ரோஹிதம் யஞ்க்யஸ்ய தேவ ம்ருத்விஜம் ஹோதாரம் ரத்ன தாதமம். அக்னிஹி பூர்வேபிர்ருஷிபிரீட்யோ நூதனைருத ஸதேவாங்கேஹ வக்ஷதி

அக்னிநா ரயிமச்னவத் போஷமேவ திவே திவே யசஸம் வீரவத்தமம்.;
அஜ்னேயம் யஞ்கமத்வரம் விச்வதஹ பரிபூரஸி ஸ இத்தேவேஷு கச்சதி

அக்னிர்ஹோதா கவிக்ரதுஹு சத்யஹ ஸ்சித்ர ஸ்வரஸ்தமஹ தேவோ தேவேபி ராகமத்

யதங்க தாசுஷேத்வமக்னே பத்ரம் கரிஷ்யஸி தவேத் தத் ஸத்யமங்கிரஹ.
உபத்வாக்னே திவே திவே தோஷா வஸ்தர்தியா வயம். நமோ பரந்த ஏமஸி

ராஜந்த மத்வராணாம் கோபாம்ருதஸ்ய தீதிவிம் வர்த்தமானம் ஸ்வேதமே

ஸநஹ் பிதேவ ஸூனவேக்னே ஸூபாயனோ பவ ஸசஸ்வாநஹ ஸ்வஸ்தயே ஹரி ஓம்.
ஓம் அக்னிர்வை தேவானா மவமோ விஷ்ணுஹு பரமஹ ஓம் அத மஹா வ்ருதம்.
ஓம் ஏஷபந்தாஹா; ஏதத் கர்ம ஓம் அதாதஹ ஸம்ஹிதாயா உபநிஷத்; ஓம்

விதாமகவன் விதாஓம்.
ஓம் மஹாவ்ருதஸ்ய பஞ்சவிம்சதி சாமிதேன்யஹ.

ஓம் இஷேத்வோர்ஜேத்வா வாயவஸ்தோபாயவஸ்தஹ தேவோவஹ சவிதா ப்ராப்யது ஸ்ரேஷ்டத மாய கர்மணே ஹரிஹி ஓம்.

ஓம் அக்ன ஆயாஹி வீத்யே க்ருணானோ ஹவ்ய தாதயே நிஹோதா ஸத்ஸி பர்ஹிஷி ஹரிஹி ஓம்.
ஓம் சந்நோ தேவி அபீஷ்டய ஆபோ பவந்து பீதயே சந்யோர் அபிஷ்ரவந்துநஹ

ஹரிஹி ஓம். ஸிக்ஷா=ஓம் அத ஸிக்ஷாம்ப்ரவக்ஷயாமி

வ்யாகரணம் =அயி உண் வ்ருத்திராதைச்

சந்தஹ்சாஸ்த்ரம்
தீ-ஸ்த்ரீம்-ம-ய-ர-ஸ த-ஜ-ப-ந-ல-க-சம்மிதம்

நிருக்தம்=கௌ-க்மா-ஜ்மா-க்ஷ்மா-ஸமானாயஹ-ஸமாம்னாதஹ.
ஜ்யோதிஷம்=பஞ்சஸம்வத்ஸர மயம்

Credits: www.tamilbrahmins.com

கல்பம்- அதைதஸ்ய ஸமாம்  னாயஸ்ய

பராசரம் முனிவரம்- --அதாதோ தர்மஜிஞ்ஞா ஸா---அதாதோ ப்ருஹ்ம ஜிஞ்ஞாஸா யோகீஸ்வரம் யாஞ்கவல்கியம் நாராயணம் நமஸ்க்ருத்ய

தச்சம் யோ ரா வ்ருணீ மஹே காதும் யஞ்க்யாயா காதும் யக்ஞ்ய பதயே தைவீஸ் ஸ்வஸ்தி ரஸ்துநஹ  ஸ்வஸ்தீர் மாநுஷேப்யஹ ஊர்ஜம் ஜிகாது பேஷஜம் சந்நோ அஸ்து த்விபதே சம் சதுஷ்பதே ஓம் சாந்தி சாந்தி சாந்திஹி.

ஓம் நமோ ப்ருஹ்மனே நமோ அஸ்து அக்னயே நமஹ. ப்ருதிவ்யை நமஹ; ஓஷதீப்யஹ நமோ வாசே நமோ வாசஸ்பதயே நமோ விஷ்ணவே  ப்ருஹதே கரோமி இதை மூன்று தடவை சொல்லவும்.
புனர் பூஜை செய்ய வேண்டும்.

காயேனவாசா மனஸே இந்திரியைவா புத்தியாத் மனாவா ப்ரக்ருதே ஸ்வ பாவாத் கரோமி யத்யத் ஸகலம் பரஸ்மை ஸ்ரீமன் நாராயனாயேதி ஸமர்பயாமி.
ஆசீர்வாதம் ஆசார்ய தக்ஷிணை.

காயத்திரி ஜபம். 19-08-2016 வெள்ளி கிழமை.

1. ஜப ஆரம்பத்தில் பூதசுத்தி , காயத்ரி ப்ராண ப்ரதிஷ்டை, ந்யாஸம், முத்ரை, காயத்ரி கவசம், காயத்ரி ஹ்ருதயம், காயத்ரி ஸ்தோத்ரம், காயத்ரி ஷாபவிமோசனம், காயத்ரி ஸஹஸ்ர நாமம்.

   முதலியவைகளை நித்ய காயத்ரி ஜபத்தில் செய்ய வேண்டும். காயத்ரி ஜபம் 19-08-2016 இன்றாவது இவைகளை செய்யவும். காயத்ரி ஜபம் செய்ய ஆரம்பிக்குமுன்போ அல்லது பின்போ செய்யவும்..

   பூதஸுத்தி: குருப்யோ நம: என்று கூறி அஞ்சலி செய்து கணபதயே நம: ; ஸரஸ்வத்யை நம: என்று கூறி வலது தோளிலும் துர்க்காயை நம; க்ஷேத்ர பாலாயை நம: என்று இடது தோளிலும் அஞ்சலியை வைத்து பூதஸுத்தி செய்ய வேண்டும்.

   தர்மமே கிழங்கு, க்ஞானமே தண்டு, வைராக்யமே மொட்டு.இத்தகைய ஹ்ருதய தரமரை மொக்கை ப்ரணவத்தால் மலர்த்துவதாக த்யானம் செய்து, இடையிலுள்ள சைதன்ய வடிவான ஜீவனை உரக்க ப்ரணவத்தை கூறி

எழுப்பி ஸுஷும்னா நாடி வழியாக த்வாத சாந்த மென்னும் சிரஸிலுள்ள ஸஹஸ்ர தள கமலத்திலுள்ள பரமாத்மாவுடன் – ஹம்ஸ: -என்ற மந்திரத்தை கூறி ஒன்றாக சேர்க்க வேண்டும்.

. பிறகு தன் உடலிலுள்ள பாபத்தை புருஷனாக கருதி அதை உலர்த்தி கொளுத்தி நனைக்க வேண்டும்.

அந்த பாப புருஷனுக்கு ப்ரஹ்மஹத்தியே தலை. ஸ்வர்ணத்தை திருடுவதே இரு புஜங்கள்.. கள் குடித்தலே ஹ்ருதயம். குரு மனைவியை புணர்வதே இடுப்பு. இந்த நாண்கு பாவிகளுடன் சேருவது என்பதே இரு கால்கள்.

ப்ரும்ம ஹத்யா ஸம பாதகங்கள் மற்ற உருவங்கள். உப பாதகங்கள் ரோமங்கள். தாடி. மீசை. கத்தி கேடயம், முதலியவைகளை தரித்திருக்கும் பாப புருஷன் தனது வயிற்றிலிருப்பதாக நினைத்து

நாபியில் ஆறு கோண சக்ரத்திலுள்ள –யம் – என்ற வாயு பீஜத்தால் அவனை உலர்த்தி ஹ்ருதயத்தில் முக்கோணதிலுள்ள –ரம்- என்ற அக்னி பீஜத்தால் அவனை கொளுத்தி , அந்த சாம்பலை வலது மூக்கால் அப்புறபடுத்தி , ஹ்ருதயத்தில் பாதி சந்த்ரன் போலிருக்கும் அம்ருத மண்டலத்திலுருக்கும் –வம்- என்ற பீஜத்தால் அம்ருத தாரையை உண்டுபண்ணி அதனால் தன் உடலை நனைத்து சுத்தமாக்கி

த்வாத சாந்ததிலுள்ள பரமாத்மாவை சுஷும்னா நாடி வழியாக ஹ்ருதய கமலத்தில் –ஓம் ஸோஹம்- என்று நிறுத்த வேண்டும். இதே பூத சுத்தியாகும்.

இதன் பிறகு காயத்ரியை ஆவாஹனம் செய்து மாத்ருகா நியாஸம் செய்ய வேண்டும்.பிறகு 24 முத்திரைகளை காட்டி , த்யானம் செய்ய வேண்டும்.

பின்னர் காயத்ரி அக்ஷர ந்யாஸம், ,பத ந்யாசம், பாத ந்யாஸம், செய்யும் போது ஒவ்வோரு அக்ஷரதிற்குள்ள ரிஷி, சந்தஸ், தேவதை முதலியவைகளை மனதால் நினைக்க வேண்டும்.

முத்ரைகளை காட்டிய பின் காயத்ரி சாப விமோசனம் என்ற மந்திரங்கள் கூற வேண்டும்.

1.ரிஷி: ஒரு மந்திரத்தை தனது தவ வலிமையால் கண்டு
அறிந்தவர் மற்றும் அதன் பயனை அறிந்தவர்., அனுபவித்தவர் ரிஷி என படுவார். ரிஷியின் ஸ்தானம் சிரஸ். ஆதலால் ரிஷி என்று கூறும் போது தலையில் கை வைக்க வேண்டும்.

2. சந்தஸ்: என்பது அந்த மந்திரத்தின் அமைப்பு ஆகும். அது உச்சரிக்கப்படும் வாய்

Credits: www.tamilbrahmins.com

அதன் ஸ்தானம். எச்சிலாக கூடாது என்று மேல் உதட்டில் அல்லது மூக்கின் பேரில் சந்தஸ் என்று கூறி கை வைக்க வேண்டும்.

3. தேவதை: அந்த மந்திரத்தினால் கூறப்படும் தேவதை நமது ஹ்ருதய கமலத்தில் இருப்பதால் தேவதை என்று கூறி மார்பில் கை வைக்கிறோம்.

ஒரே காயத்ரி மந்திரத்திற்கு ப்ராணாயாமத்தில் வரும் போது காயத்ரி சந்தஸ் என்றும் , காயத்ரி ஜபத்தில் ந்ருசித் காயத்ரி சந்தஸ் என்றும் , பொருளிலும் சிறிது மாறுதல் ஏற்படுகிறது.

காயத்ரி ஜப கர ந்யாஸம்.:
ஓம் தத்ஸவிது: ப்ருஹ்மாத்மனே அங்குஷ்டாப்யாம் நம:
வரேண்யம் விஷ்ணுவாத்மனே தர்ஜனீப்யாம் நம:
பர்கோ தேவஸ்ய ருத்ராத்மனே மத்யமாப்யாம் நம:

தீமஹி ஸத்யாத்மனே அநாமிகாப்யாம் நம;
தியோயோன: க்ஞானாத்மனே கனிஷ்டிகாப்யாம் நம;
ப்ரசோதயாத் ஸர்வாத்மனே கரதலகர ப்ருஷ்டாப்யாம் நம;

அங்க ந்யாஸம்;

ஓம் தத்ஸவிது: ப்ருஹ்மாத்மனே ஹ்ருதயாயை நம;
வரேண்யம் விஷ்ண்வாத்மனே சிரஸே ஸ்வாஹா
பர்கோ தேவஸ்ய ருத்ராத்மனே சிகாயை வஷட்

தீமஹி ஸத்யாத்மனே கவசாய ஹூம்
தியோ யோந; க்ஞானாத்மனே நேத்ர த்ரயாய வௌஷட்
ப்ரசோதயாத் சர்வாத்மனே அஸ்த்ராய பட்

பூர்புவஸுவரோம் இதி திக் பந்த:: என்று சொல்லி நம்மை சுற்றி ப்ரதக்ஷிணமாக கட்டை விரல் நடு விரல்களால் சப்தம் செய்ய வேண்டும்.

போதாயன மஹரிஷி கூறுகிறார்: ஸந்த்யை என்பது உலகை படைத்தது. மாயையை கடந்தது. நிஷ்கலமானது. ஈஸ்வரியானது. கேவல சக்தியானது. மும்மூர்த்திகளிடமிருந்து உண்டானது.

அந்த ஒரே பராசக்தியானது மூன்று வேளைகளிலும் மூன்று தனி ரூபத்துடன் விளங்குகிறது. தனி பெயர், தனி வர்ணம், தனி வாஹனம் இவைகளால் வேறுபட்டது போலிருக்கிறது.

அந்தந்த காலத்தில் அந்தந்த ரூபிணியாக த்யானம் செய்து ஒவ்வொரு வேளையிலும் ஏக ரூபமாய் இருப்பதாகவும் த்யானம் செய்ய வேண்டும்.
இதற்குத்தான் ஸந்த்யை என்று பெயர்.

காலை ஜபத்தில் ஸூர்ய மண்டலதினிடையே சிவந்த வர்ண முள்ளவளாய், குமாரியாய் ரஜோ குணம் உள்ளவளாய் ஹம்ஸ வாஹனத்தில் ப்ருஹ்ம ஸ்வரூபிணீயாய் ( ஸரஸ்வதி) ரிக் வேத ரூபிணியாய் அபய முத்ரை, கமண்டலு , தாமரைபூ, ஜபமாலை, ஸ்ருவம் இவைகளை தரித்து இருப்பவளாய் காயத்ரியாக த்யானம் செய்ய வேண்டும்.

மத்யானத்தில் ஸூர்ய மண்டலத்தில் வெண்மை நிறம், தமோ குணம், கட்டில்கால், அபய முத்ரை, சூலம், ருத்ராக்ஷ மாலை, இந்த ஆயுதங்களை தரித்து (உமை) யௌவன முள்ளவளாகவும் , வ்ருஷப வாஹனத்தி லிருப்பவளாகவும் மூன்று கண் உள்ளவளாகவும் , யஜுர் வேதமாகவும், ருத்ர ரூபிணீயாகவும் ஸாவித்ரீ என்ற பெயரில் த்யானம் செய்ய வேண்டும்.

ஸாயங்காலத்தில் ஸூர்யமண்டலத்தில் ஸரஸ்வதி என்ற பெயர். கறுத்த வர்ணம், கிழ சரீரம், கருட வாஹணம், சங்கு, சக்ர, அபய, துலஸீ மாலை, க்ஞான ஸ்வரூபம்,ஸத்வ குணம், சாம வேதம், இவைகள் உள்ள விஷ்ணு (லக்ஷ்மி) ஸ்வரூபமாய் த்யானம் செய்ய வேண்டும்.

இந்த மூன்று காலங்களில் கூறப்பட்டவை ஸ்தூலம். இது ஸூக்ஷ்மம் தனிதனியாக இருப்பது வ்யஷ்டி; எல்லாம் சேர்ந்த போது ஸமஷ்டி எனப்படும்..

ஸமஷ்டி ரூப காயத்ரி த்யானம்:
முத்து. பவழம், ஸ்வணம், கருப்பு, வெளுப்பு, ஆகிய வர்ணங்களுடைய ஐந்து முகமுள்ளவளும், ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்கள் உடையவளும், சந்த்ர கலையை தலையில் அணிந்தவளும், ,

தத்வார்த்தம் உள்ளதான எழுத்து ரூபமானவளும்,வரதம், அபயம், அங்குசம், பாசம், வெளுப்பு கபாலம், கதை, சங்கம், சக்ரம், இரு தாமரை இவைகளை கைகளில் ஏந்தியவளுமான காயத்ரியை பஜிக்கிறேன்.

காயத்ரியின் பொருள் பரமாத்மாவே. இது எங்கும் உளது. சத்சித் ஆனந்த ரூபமானது .உருவும் பெயரும் இல்லாதது. வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாதது. சிற்றறிவால் அறிய முடியாதது. சிறிய மனதால் த்யானம் செய்ய முடியாதது.

ஆதலால். முதலில் ஸூர்யனையும் ஸூர்ய மண்டலத்தில் காயத்ரி, ஸாவித்ரி, ஸரஸ்வதி ஸமஷ்டி காயத்ரி என்று பல வாறாக த்யானம் செய்யும் படி கூறபட்டது.

ஒன்றயே நித்யம் மூன்று வேளையும் த்யானம் செய்தால் அது மனதில் தங்கி விடும்.

ஒன்று ஒன்றாக த்யானம் செய்து பழகினால் , ஒன்றில் நிலைக்காமல் த்யான சக்தி வ்ருத்தியாகும்.

நாள் ஆக ஆக இந்த உருவங்களையும் விட்டு விட்டால் மனம் ஒன்றையும் நினையாமல் அசைவற்று இருக்கும்.. மநோ வ்ருத்திகள் ஒழிந்தால் தான் க்ஞானம் நிலைக்கும். முக்தி உண்டாகும். ஆதலால் ஸந்தியாவந்தன கர்மா படிபடியாக மோக்ஷ ஸாதனமாகும்.

ஸந்த்யை என்பது ப்ருஹ்மா, விஷ்ணு, ருத்ரர்களை விட, ஸரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதியை விட மேலான சிறந்த துரிய சக்தி. நமது சித்த பரிபாகத்திற்கு ஏற்றப்படி இவ்விதம் ஸூர்ய மண்டலத்தில் மூன்று மூர்த்திகளாக த்யானம் செய்யும் படி கூறப்பட்டது.

பஞ்ச பூஜை:

லம் ப்ருத்வ்யாத்மனே கந்தாம் தாரயாமி.
அம். ஆகாசாத்மனே புஷ்பாணி பூஜயாமி.
யம் வாய்வாத்மனே தூபம் ஆக்ராபயாமி.

ரம் வஹ்ன்யாத்மனே தீபம் தர்சயாமி.
வம் அம்ருதாத்மனே அம்ருதம் நிவேதயாமி.
ஸம் ஸர்வாத்மனே ஸர்வோபசாரான் ஸமர்பயாமி.

| மந்திரம் | ரிஷி | சந்தஸ் | தேவதை |
|---|---|---|---|
| ஓம். ப்ராணாயாம ப்ரணவம். | ப்ரும்மா | தேவி காயத்ரி | பரமாத்மா. |
| பூ: | அத்ரி | காயத்ரி | அக்னி. |
| புவ: | ப்ருகு | உஷ்ணிக் | வாயு |
| ஸுவ: | குத்ஸர் | அநுஷ்டுப் | அர்க்க |

| | | | |
|---|---|---|---|
| மஹ; | வசிஷ்டர் | ப்ருஹதி | வாகீசர் |
| ஜன: | கௌதமர் | பங்க்தி | வருணன் |
| தப: | காஷ்யபர் | த்ருஷ்டுப் | இந்த்ரன் |
| ஸத்யம். | ஆங்கீரஸர் | ஜகதீ | விஸ்வேதேவர். |
| காயத்ரி | விஸ்வாமித்ரர் | காயத்ரி | ஸவிதா |
| காயத்ரீஸிரஸ். | ப்ருஹ்மா | அநுஷ்டுப் | பரமாத்மா. |
| ஆபோஹிஷ்டா | ஸிந்துத்வீபர் | காயத்ரி | ஆப: |
| ஸூர்யஸ்ச | அக்னி | காயத்ரி | ஸூர்ய: |
| ஆப:புனந்து | விஸ்வேதேவர் | அனுஷ்டுப் | ஆப: |
| அக்னிஸ்ச | ஸூர்யன் | காயத்ரி | அக்னி |
| ததிக்ராவிண் ணோ | வாமதேவர் | அனுஷ்டுப் | விஸ்வேதேவர் |
| அர்க்ய காயத்ரி | விசுவாமித்ரர் | காயத்ரி | சவிதா/பரமாத் மா |
| ஆயாது | வாமதேவர் | அனுஷ்டுப் | காயத்ரி |
| ஸாவித்ரி/காயத் ரி | விஸ்வாமித்ரர் | ந்ருசித் காயத்ரி | ஸவிதா |
| உத்தமே | வாமதேவர் | அனுஷ்டுப் | காயத்ரி. |
| மித்ரஸ்ய | விஸ்வேதேவர் | காயத்ரி | மித்ரர் |
| ஆஸத்யேன | ஹிரண்யகர்பர் | த்ருஷ்டுப் | ஸவிதா |
| இமம்மே | சுனஸ்ஸேப | காயத்ரி | வருணன். |

| | | | |
|---|---|---|---|
| ப்ராண ப்ரதிஷ்டை | ப்ருஹ்மா,விஷ்ணு மஹேஸ்வரர் | ருக்,யஜுஸ்,ஸாமம், அதர்வண | ப்ராணசக்தி |

காயத்திரி ஜப ஸங்கல்பம்.

**காலையில் எழுந்து ஸ்நானம் காலை ஸந்தியா வந்தனம், காயத்திரி ஜபம் முடித்து விட்டு இதற்காக ஆசமனம் செய்துவிட்டு வலது கை மோதிர விரலில் தர்பை பவித்ரம் தரித்து ; காலின் கீழ் இரு**

**தர்பைகளை போட்டுக்கொண்டு பவித்திர விரலில் இரு தர்பங்களை இடுக்கி கொண்டு தொடங்கவும்.**

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசி வர்ணம் சதுர்புஜம் ப்ரசன்ன வதனம் த்யாயேத் சர்வ விக்னோப சாந்தயே .நெற்றியில் 5 தடவை குட்டிக்கொள்ளவும்

.ஓம்பூ: ஓம்புவ: ஓகும் ஸுவ: ஓம் மஹ: ஒம்ஜன: ஓம் தப: ஓகும் சத்யம். ஓம் தத்ஸ விதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீ மஹி தியோ யோன: ப்ரசோதயாத் ஓம் ஆபோ ஜ்யோதிரஸோ அம்ருதம் ப்ரஹ்மா ஓம் பூர்புவஸுவரோம்.

மமோ பாத்த ஸமஸ்த துரிதயக் ஷயத்துவார ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் சுபே சோபனே முஹுர்த்தே ஆத்ய ப்ர்ஹ்மனஹ த்விதீய பரார்தே ஸ்வேத வராஹ கல்பே வைவஸ்வத மன்வந்தரே அஷ்டாவிம்சதீ தமே கலியுகே ப்ரதமே பாதே ஜம்பூத்வீபே

பாரத வருஷே பரதஹ் கண்டே மேரோ: தக்ஷிணே பார்சுவே சகாப்தே அஸ்மின் வர்த்தமானே வ்யவஹாரிகே ப்ரபவாதி சஷ்டி ஸம்வத்ஸரானாம் மத்யே துர்முகீ நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே வருஷ ருதௌ ஸிம்ம மாசே க்ருஷ்ண பக்ஷே

ப்ரதமாயாம் சுபதிதௌ ப்ருகு வாஸர சதபிஷங் நக்ஷத்திர யுக்தாயாம் அதி கன்ட நாம யோக கௌலவ கரண ஏவங்குண விசேஷன விசிஷ்டாயாம் அஸ்யாம் ப்ரதமாயாம் சுபதிதௌ மித்யாதீத ப்ராயஸ்சித்தார்த்தம் தோஷ வஸ்து அபதனீய

ப்ராயஸ் சித்தார்த்தம் ஸம்வத்ஸர அகரண ப்ராயஸ் சித்தார்த்தம் அஷ்டோத்திர ஸஹஸ்ர ஸங்கிய்யா காயத்திரி மஹா மந்திர ஜபம் கரிஷ்யே என்று சொல்லி வலது கையில் இடுக்கி இருக்கும் தர்பை புல்லை வடக்கில் போடவும்

.
ஜலத்தை கையால் தொடவும்.
பிறகு ப்ரணவஸ்ய ரிஷிர் ப்ரஹ்ம தேவி காயத்ரி சந்தஹ பரமாத்மா தேவதா பூராதி ஸப்த வ்யாஹ்ருதீனாம் அத்ரி ப்ருகு குத்ஸ வஸிஷ்ட கெளதம காசியப ஆங்கீரஸ ரிஷயஹ

காயத்ரி உஷ்னிக் அநுஷ்டுப், ப்ருஹதி பங்தி த்ருஷ்டுப் ஜகத்யஹ சந்தாம்ஸி. அக்னி வாயு அர்க வாகீஸ வருண இந்திர விஸ்வே தேவாஹா தேவதாஹா

ப்ராணாயாமம் பத்து தடவை செய்யவும். ஓம்பூஹு; ஓம்புவஹ ஓகும் ஸுவஹ;ஓம் மஹ; ஓம் ஜன; ஓம் தபஹ; ஓகும் ஸத்யம் ஓம் தத்ஸ விதுர்வரேண்யம்; பர்கோ தேவஸ்ய தீ மஹி தியோ யோனஹ் ப்ரசோதயாத் ஓமாபோ ஜ்யோதிரஸோ அம்ருதம் ப்ருஹ்ம பூர்புவஸ்ஸுவரோம்

ஆயாது இத்யனுவாகஸ்ய வாமதேவ ரிஷி; அநுஷ்டுப் சந்த; காயத்ரி தேவதா. ஆயாது வரதா தேவி அக்ஷரம் ப்ருஹ்ம ஸம்மிதம் காயத்ரிம் சந்தஸாம் மாதா இதம் ப்ருஹ்ம ஜுஷஸ்வனஹ.

ஓஜோசி ஸஹோஸி பலமஸீ ப்ராஜோசி தேவாநாம் தாம நாமாஸி விசுவமஸி விஸ்வாயுஹு ஸர்வமஸி ஸர்வாயுஹு அபிபூரோம் காயத்ரீம் ஆவாஹயாமி ஸாவித்ரீம் ஆவாஹயாமி ஸரஸ்வதீம் ஆவாஹயாமி

ஸாவித்ரியா ரிஷி; விசுவாமித்ர; நிசிரித் காயத்ரி சந்த; ஸவிதா தேவதா
காயத்ரி மந்திரம் 1.ஓம் 2. பூர்புவஸ்ஸுவஹ 3. தத்ஸ விதுர்வரேன்யம் 4. பர்கோ தேவஸ்ய தீ மஹி 5 தியோயோனஹ ப்ரசோதயாத் என ஐந்தாஹ பிறித்து சொல்ல வேண்டும்.
1008 எண்ணிக்கை முடிந்தவுடன் ஒரு ப்ராணாயாம்ம் செய்து காயத்ரி உபஸ்தானம்

கரிஷ்யே என்று சொல்லி உத்தமே சிகரே தேவி பூம்யாம் பர்வத மூர்தனி ப்ராஹ்மனேப்யோ ஹ்யனுக்ஞானம் கச்ச தேவி யதா சுகம் என்று உபஸ்தானம் செய்யவும். நமஸ்காரம் செய்யவும்.பவித்ரத்தை அவிழ்த்துவிட்டு ஆசமனம் செய்யவும்.